ஸ்ரீ:

232

# மும்மதத்தேனடை

நியாய வியாகரண சிரோமணி

P. B. K. ஸ்ரீ நிவாசாரியார் அவர்களால்

கட்டப்பட்டது.

ஸ்ரீமான் M. தேவராஜுலு நாயுடு அவர்களின்

(Retired Head Post-master)

ஆதரவினால் அச்சிடப்பட்டது.

P. B. K. ஸ்ரீ நிவாசாரியார்,

நெ. 12, துளசிங்கப்பெருமாள் கோயில் சந்து,

திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்.] 1948. [விலை அணா 4.

ஸ்ரீ:

232

# மும்மதத்தேனடை

நியாய வியாகரண சிரோமணி

P. B. K. ஸ்ரீநிவாசாரியார் அவர்களால்

கட்டப்பட்டது.

ஸ்ரீமான் M. தேவராஜுலு நாயுடு அவர்களின்

(Retired Head Post-master)

ஆதரவினால் அச்சிடப்பட்டது.

P. B. K. ஸ்ரீநிவாசாரியார்,

நெ. 12, துளசிங்கப்பெருமாள் கோயில் சந்து,

திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்.] 1948. [விலை அணா 4.

# ஸமர்ப்பணம்.

அடியேனுடைய தகப்பனாரும், ஆசாரியருமான, திருநாங்கூர் பிரதிவாதிபயங்கரம், ஸ்ரீ. உ. வே. வித்வான் ஸ்ரீ. கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமியின் ஞாபகார்த்தமாக இந்த கிரந்தமானது பகவானுடைய பாதாரவிந்தத்தில் ஸமர்ப்பிக்கப்பட்டது.

P. B. K. ஸ்ரீநிவாஸதாஸன்.

## பொருள் அடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | முன்னுரை .... .... .... | 5 |
| 2. | மதிப்புரை .... .... .... | 7 |
| 3. | அத்வைதம் .... .... .... | 11 |
| 4. | விசிஷ்டாத்வைதம .... .... | 17 |
| 5. | த்வைதம் .... .... .... | 22 |
| 6. | குறிப்பு .... .... .... | 27 |
| 7. | முடிவுரை .... .... .... | 31 |

# முன்னுரை.

எல்லா மதங்களிலும் ஞானச்சுடர் விளக்காயும், மேம் பொருளாயும், விளங்கும் ஸ்ரிய:பதியான ஸர்வேசுவரன் மனிதா களின் அறிவு வளர்ச்சிக்காக, இவ்வுலகில் வேதம் முதலிய அற நூல்களை குறைவில்லாமல் விரித்தருளிச் செய்திருக்கிறான். அந்த அற நூல்களெல்லாம் பகவானுடைய கட்டளைகளேயாம். மேன்மையை விரும்பி யடைய முயற்சி செய்யும் எவர்களுக்கும் அந்நூல் வழி நடப்பதே உசிதமாகும். அந்த வேதம் முதலிய சாஸ்திரங்களுக்கு விரிவுரை செய்வதில் முயற்சித்த பல முனிவர் களும், ஆசார்யர்களும், தங்கள் ஜ்ஞானசக்திகளுக்குத் தக்கவிதம் அவைகளுக்கு வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். அவ்வுரை களில் காணப்படும் பொருள்களெல்லாம் வேதப் பொருள்களே. எல்லாம் மனிதனுக்கு நன்மை பயப்பனவே. ஆகையால் வைதிகர் களாய் ஆஸ்திகர்களான நமக்கு எல்லா மதமும் ஸம்மதமானதே. அந்தந்த தேச காலங்களின் மாறுபாடுகளும் மத மாறுபாடுகளுக்குக் காரணமாகின்றன. அகண்டமான இவ்வுலகில் தேசகால பேதத் தால் ஆங்காங்கு அநுஷ்டானம் மாறுபட்டிருக்கக் காண்பது இங்கு உதாஹரணமாகும். நாஸ்திக மதங்களையும் நாம் இவ்வித நோக்குக்கொண்டே காணவேணும். எவ்விடத்திலும் ஏதாவதொரு அரியபொருள் இருந்தே தீரும். அதை நாம் எடுத்துப் பயன் படுத்திக் கொள்ள வேணும். இதில் தயக்கத்துக்குச் சிறிதும் காரணமில்லை. இந்நோக்கு கொண்டு நாம் எம்மதத்தையும் மதிப்புடன் நடத்துவதே உண்மையான மத ஸ்வதந்திரமாகும். இதை நிலை நிறுத்துவதே ஒவ்வொருவனின் கடமையாகும். நாமும் இக்காரணங் கொண்டே இந்த மும்மதத்தேனடை கட்டியிருக்கிறோம். இதிலுள்ள மதத்ரயமாகிற தேனை ருசி

யுடைய எல்லாரும் அருந்த வேணும். ருசி யில்லாதவர்களும் பரீக்ஷார்த்தமாகவாவது ஒரு முறை இத்தேனை யருந்தவேணும் என்று நம்முடைய தாழ்ந்த விண்ணப்பம். மதத்திரய கீதா பாஷ்ய மலரின் நின்றும், ஸர்வ தர்சன ஸங்கிரஹப்போதின் நின்றும், மற்றும் பல புஸ்தக மலரின் நின்றும், சேகரிக்கப்பட்டது இந்நூல். இரண்டு வருஷ காலமாக ஸ்ரீமான். எம். தேவராஜுலு நாயுடு அவர்கள் வீட்டில் நடத்தி வந்த ஸ்ரீ பகவத் கீதா காலக்ஷேபமடியாக இந்நூல் தோன்றிற்று. அன்னாருக்கு என்னுடைய நன்றி என்று முரித்தாகும். இம் மும்மதத்தேனடையானது எல்லோர் கையிலும் ஸுலபமாய் நன்ருய் நறுமணங் கமழும்படி அச்சிடுவதில் உதவிபுரிந்த மாடர்ன் பிரண்டர்ஸ் புரொப்ரைட்டர் ஸ்ரீமான் S. புண்டரீகாக்ஷ நாயுடு அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி எப்பொழுது மிருப்பதாகுக. பல மதம் தழுவியுள்ள நாம் ஸமீபத்தில் ஸ்வதந்திர மடைந்து விளங்கும் நம்முடைய இந்த ஸந்தோஷ தர்சமயத்தில் என் மனதால் கூட்டின இந்த நல்விருந்தானது எல்லோராலும் ஏற்கப்படுமென்று நம்பும்,

P. B. K. ஸ்ரீநிவாஸாசாரியார்,

உபாத்தியாயர்.

ஸ்ரீபாஷ்யகார ஸித்தாந்த வர்த்தினீ, ஸம்ஸ்கிருத ஹை ஸ்கூல்.

8–4–'48. நெ. 51, நாராயண முதலித் தெரு, ஜி. டி. மதராஸ்.

# மதிப்புரை.

நியாய, வியாகரண, சிரோமணி ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸசாரியர் என்னும் அற்புத மதுகரத்தால், அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்னும் மும்மதங்களை விளக்கிக் கூறும் பூர்வாசாரியர்களின் நிபந்தங்களாகிய பரிமளம் வீசும் திவ்விய குஸுமங்களிலிருந்து கிரஹித்துக் கட்டப்பட்ட அழகு பொருந்திய இந்த மும்மதத்தேனடையுள் உள்ள மதுவை நான் அனுபவித்து ரஸித்ததுடன், "ருசியான வஸ்துவை ஒருவரே புஜிக்கலாகாது" என்கிற நீதியின்படி எல்லா ரஸிகர்களும் அனுபவித்து ரஸிக்குமாறு சிபார்சு செய்கிறேன்.

உலகில் அவதார புருஷர்களான சங்கரர், ராமாநுஜர், மத்வர் என்னும் ஜகத்குரு மும்மூர்த்திகளால் உபனிஷத், பகவத் கீதை, பிரம்ம ஸூத்ரம் என்னும் மூன்று பிரஸ்த்தானங்களின் மூலமாய், சர்வாதிகாரிகளும் கடைத்தேறும் பொருட்டு வெளியிடப்பட்டதும், அணுத்மா, ஆத்மா, அந்தராத்மா என்னும் முப்பொருளையும் பிரத்யக்ஷம் அனுமானம் ஆகமம் என்னும் மூவிதப் பிரமாணங்களுக்கும் முரண்படாமல் விளக்குவதும், கர்மம், பக்தி, ஜ்ஞானம் என்ற மூவித ஸாதனங்களையும் புகட்டுவதும், ஸ்தூலம், ஸூக்ஷமம், காரணம் ஆகிய மூவித ஆவரணத்தையும் விளக்குவதும், ஐஹிகம், ஆமுஷ்மிகம், மோக்ஷமென்னும் விஷயானந்தம், ஆத்மாநந்தம், பிரம்ஹாநந்தம் என்று கூறப்படும் முப்பயனை யளிப்பதும், சூரியன், சந்திரன், அக்நியாகிற மூன்று ஜ்யோதிஸ்போல் எங்கும் பிரகாசிப்பதும், கங்கையைப்போல் மூன்று மார்கங்களாகப் பிரிந்து உலகெங்கும் பரவி உலகத்தை பரிசுத்தப்படுத்துவதும், ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்னும் மூன்று தாபங்களைப்

போக்கடிப்பதும், வெளிப் பார்வையில் விரோதமுள்ளதாகத் தோன்றினாலும் உள்நோக்குடன் கவனிப்பவர்களுக்கு ஒன்றுக்கொன்று விரோதமில்லாமல் ஸமரஸமாய்ப் பிரகாசிப்பதும், இன்னமும் ஆழ்ந்து பார்ப்பவர்களுக்கு ஒன்றையொன்று ஆசிரயித்து பரஸ்பரம் அனுகூலங்களாய்ப் புலப்படுவதுமான அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்னும் மூன்று தர்சனங்களையும், இந்த மும்மதத்தேனடையில் கூறியவாறு சரீரம், வாக்கு, மனம் என்னும் முக்கரணங்களாலும், ஸேவித்து ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களையும் கடந்து மோக்ஷமாகிய பரமபத லாப மெய்தி எல்லோரும் ஜன்மஸாபல்யம் பெறும்படி பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் மும்மூர்த்திகளும் மாதா, பிதா, ஆசாரியன் ஆகிய மூன்று குருக்களும் அனுக்ரஹிக்குமாறு வேண்டுகிறேன்.

இவ்விதம்,

**போலகம். சு. ஸ்ரீராமசாஸ்திரிகள்,**

அத்வைத வேதாந்த உபாத்தியாயர்,

31–3–'48. ஸம்ஸ்கிருத கலாசாலை, மைலாப்பூர், சென்னை.

ஸ்ரீ. உ. வே. பிரதிவாதிபயங்கரம் ஸ்ரீநிவாஸசாரியார் அவர்களால் எழுதப்பட்ட மும்மதத்தேனடை கிரந்தத்தை ஆமூலாக்கிரம் படித்துப் பார்த்ததில் மத த்ரயங்களின் பராபர தத்வங்கள் மிகவும் சுலபமான நடையில் இந்நூலில் விளக்கிக் காட்டியிருப்பது தெரிந்தது.

ஒவ்வொரு மதத்தையும் ஸம்பூர்ணமாக அந்தந்த மதாசாரியர்களிடம் படித்தவர்களுக்கு எப்படி தத்வஜ்ஞானம் உண்டாகுமோ அவ்வளவு ஸூக்ஷ்ம தத்வஜ்ஞானம் இந்த கிரந்தத்தை படித்தால் உண்டாகும் என்பதில் ஸந்தேஹமில்லை.

தத்வத்தை யறிய விருப்பமுள்ளவர்களுக்கு இந்த கிரந்தம் மிகுந்த உபயோகமாக இருக்கும் என்பதில் ஆக்ஷேபமில்லை.

இவ்விதம்,

கௌ. யதுநாதாசாரியர்,

த்வைத வேதாந்த வித்வான்,

8-4-'48. திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ. உ. வே. பிரதிவாதிபயங்கரம் ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி எழுதிய **மும்மதத்தேனடை** என்னும் கிரந்தத்தைப் படித்துப் பார்த்தேன். இத்தேசத்தில பரவியிருக்கும் த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்கிற வைதிக மதங்கள் மூன்றிலும், 'ஒருவன் தத்வ ஹித புருஷார்த்தங்களைப் பற்றிய உண்மையான அறிவை அடைய ஆத்ம க்ஷேமத்தைப் பெறுகிறான்' என்னும் விஷயம் ஒரே மாதிரி அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த கிரந்தத்தில் அந்தந்த மதத்தில் ஒத்துக்கொள்ளப்பட்ட தத்வ ஹித புருஷார்த்தங்கள் யாரும் நன்றாக அறியும்படி எளிய நடையில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

மும்மதங்களிலும் சுருக்கமாக விஷயங்களை யறிய விரும்புவோர்க்கு இது பயன்படும். இம்மாதிரி பல நூல்கள் பலர்க்கு உபயோகப்படும்படி மேற்படி ஸ்வாமி மூலமாக வெளியிடப்பட்டால் மிகவும் லோகோபகாரகமாக விருக்கும்.

இவ்விதம்,
வேங்கடாசாரியார்,
ஸ்ரீமதுபய வேதாந்த வித்வான்,
காரப்பங்காடு.

13-4-'48.

நெ. 3, காசிச்செட்டித் தெரு, சென்னை.

## அத்வைதம்.

வேதங்களில் மேம்பொருளான பிரம்மத்தை யறிவிக்கும் பாகம் வேதாந்தமெனப்படும். அதுக்கு வியாக்கியானமாயும், பரபிரம்மத்தை விசாரிப்பதாயுமான நூல் வியாஸரருளிச் செய்தது ஸூத்திரமெனப்படும். அதுக்கு பாஷ்யங் கண்ட மூன்று ஆசாரியர்கள் (1) ஸ்ரீ சங்கராசாரியார், (2) ஸ்ரீ ராமாநுஜர், (3) ஸ்ரீ ஆனந்த தீர்த்தாசாரியார் என்பவர்கள். அதில் சங்கராசாரியர் மலையாள தேசத்தில் காலடி என்னும் க்ஷேத்திரத்தில்கி. பி. 9-வது நூற்றாண்டில் பிறந்து வளர்ந்து, வேதாந்தத்துக்கு பிரம்மாத்வைத பரமாய் உரை செய்தார். இவர் 'சங்கராம்சம்' என்று பிரஸித்தமானவர். இவர் கண்டு பரப்பின அத்வைத மதத்தின் ஸாரமாவது:—

பரபிரம்மமொன்றே பரமார்த்தமான ஸத்பொருளாயுள்ளது. இது சித்கனம். அதாவது முழுதும் ஜ்ஞான ஸ்வரூபம். இது எங்கும் நிறைந்தது. அதுக்கு (1) எல்லா விஷயங்களையு மறிவதான ஞானம், (2) எல்லா விஷயங்களிலும் இச்சை அதாவது விருப்பம், (3) எல்லாவற்றிலும் பிரவிருத்தி அதாவது முயற்சி செய்வது என்கிற குணங்கள் கிடையாது. இச்குணங்கள் (1) ஸத்வம். (2) ரஜஸ். (3) தமஸ் என்னும் முக்குணங்களின் காரியங்கள். இம்முக்குணங்கள் மாயா' அதாவது அவித்யா—பிரகிருதி, அதன் காரியமான அந்தக்கரணம் பிரபஞ்சம் முதலியவைகளிலேயே இருக்கின்றன. பரபிரம்மம் இந்த குணத்திரயாதீதமென்பது

வேதாந்தத்திலும், கீதை 14-வது அத்தியாயத்திலும் விளக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பிரம்மமானது ஞானம் முதலிய குணங்களைப் பெருததாய் நிர்குணமாகிறது.

பாலைவனத்தில் கதிரவனின் கிரணம் பரவி நீரோடு வதுபோல் தோற்றுகிறது. விடாயுள்ள ஒருவன் அதைத் தண்ணீரென எண்ணி குடிக்கப் போகிருன். அப்பொழுது உண்மையறிவாளி ஒருவன் வந்து 'இது ஜலமில்லை சூரிய கிரணவெப்பமே இப்படி தோற்றுகிறது நீ ஏமாருதே' என்று சொல்லுகிருன். உடனே விடாய்த்தவனுக்கு உண்மை தெரிந்து விடுகிறது. தப்பெண்ணமும் போய் விடுகிறது. அதுபோலவே அஞ்ஞியான அவித்யையால் பிரம்மம் மறைந்து பல ஜீவராசி நிறைந்த பிரபஞ்சமாய் தோற்றுகிறது. இப்பொழுது தத்வஞானியானவன், நீ நான் என்கிற இது முதலிய எல்லாம் பரபிரம்மமே. பேதமாய்த் தோற்றுவ தெல்லாம் மாயாகாரியம், பொய்யானது என்று உபதேசிக்க, நான், இது என்னுடைய தேஹம், என்று இது முதலான பேதபுத்தி கழிந்து பிரம்மஸ்வரூப பாவமே மீறுகிறது. ஆகவே பரபிரம்ம மொன்றே. (1) பர்மார்த்த ஸத் அதாவது எப் பொழுது மிருப்பதான பொருள். அவித்யை முதலிய பிரபஞ்சம். (2) வியாவஹாரிக ஸத்; அதாவது பிரம்ம ஞானத்துக்கு முன்பு தோன்றி பிரம்ம ஞான முண்டான தும் கழிவதான பொருள். பிரபஞ்சத்திலேயே முத்துச் சிப்பியில் அதன் வெண்மையான பளபளப்பினுல் இது வெள்ளி என்கிற பொய்யறிவும் வெள்ளியாகிற பொய்ப் பொரு ளும் உண்டாகி ஞானமுண்டானதும் அப்பொய்யறிவுடன்

அந்த வெள்ளியாகிற பொய்ப் பொருளும் கழிகிறது. இவ்வித வெள்ளி முதலானவை. (3) பிராதிபாஸிக ஸத் அதாவது பிரம்மம்தவிர மற்றொன்றில் தோன்றி கழிவதான பொருள். இப்படி இம்மதத்தில் மூன்றுவித ஸத் பதார்த்தம் ஒத்துக் கொள்ளப்படுகிறது.

அதில் அவித்யையானது முன்பு தோற்றுவதால் 'ஸத்' என்றும் பிரம்மஞான முண்டானதும் கழிவதால் "அஸத்" என்றும் இக்காரணத்தால் இது ஸத்துதான் அல்லது இது அஸத்துதான் என்று ஒருவிதமாய்ச் சொல்ல முடியாதது. இந்த அனுதியான மாயை தன் ஸத்வாதி குணங்களின் குறைவு நிறைவு வேற்றுமையால் மஹத், அஹங்காரம், முதலான 24 தத்வமாயும் அதன் காரியமான பிரபஞ்சமாயும் தோற்றுகிறது. அதில் மாயையில் பிரதிபலித்த அதாவது கண்ணாடி முதலியதில் முகம் முதலிய பிம்பத்தின் பிரதி பிம்பம்போல் தோற்றின பரபிரம்மம் "ஈசுவரன்" என்றழைக்கப்படுமதாகிறது. அந்தக்கரணத்தில் ப்ரதிபலிக்கும் ப்ரம்மம் "ஜீவன்" என்றழைக்கப் படுமதாகிறது. அதில் மாயாகாரிய விகாரமான ஞானம், சக்தி முதலியன அதிக விஷயங்களை யறிந்து வியாபிக்குமவை. ஏனெனில்? மாயையில் ரஜஸ் தமஸ் இக்குணங்களிலும் ஸத்வம் எப்பொழுதும் கொஞ்சமதிகமாயே யிருக்கும். அத்தால் ஈசுவரன் ஸர்வக்ஞன், ஸர்வசக்தி என்று பிரஸித்தனாகிறான். இவனே ஸகுண பிரம்மம். இவன் உலகின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரத்துக்காக அவ்வக் காலங்களில் முறையே பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்று பல உருவ முடையவனாகிறான். அதில் பிரம்மாவின் சரீரமானது

தன்னிடமுள்ள அதிகமான ஸத்வத்திலும் தமஸ்ஸிலுங் காட்டில் அதிகமான ரஜோகுணமுடையதாயிருக்கும். இது போலவே விஷ்ணு சரீரம் அதிக ஸத்வ குணத்தை யுடையதும், ருத்திர சரீரம் அதிக தமோகுணத்தை யுடையதுமாகிறது. இவ்விதமாக இந்த மதத்தில் இம்மும்மூர்த்திகளும் ஸமமானவர்களே.

அந்தக்கரணத்தில் ஸத்வம் குறைந்திருக்கு மாகையால் இதன் காரிய விகாரமான ஞானம், சக்தி முதலியவை அளவுபட்ட விஷயங்களே யறிந்து வியாபிக்குமவை. ஆகையால் ஜீவன் "அல்பக்ஞன், அல்பசக்தி" என்று பிரஸித்தனுகிறுன். அந்தக்கரணம் பலவாகையால் ஜீவர்களும் பலரே. இவர்கள் உண்மையில் பிரம்மமே யாகையால் நித்யர்களே. எங்கும் நிறைந்தவர்களே. இவர்களுக்கு இஹபரலோக ஸஞ்சாரம் சொல்லுவது, ஜலத்தில் தோன்றும் சந்திரன் முதலிய ஜலமசைய யசைவதுபோல் தோன்றி 'சந்திரன் அசைகிறுன்' என்று வியவஹரிப்பதுபோல் அந்தக்கரண அசைவாலேயே. இதுபோலவேதான் அந்தக்கரணவிகாரமான விஷயங்களே யறியும் ஞானம், இச்சை, பிரவிருத்தி முதலிய குணங்கள் ஜீவனில் தோற்றி, ஜீவன் ஜ்ஞாதா, கர்த்தா, போக்தா என்று வியவஹரிக்கப்படுகிறுன். புத்த மதத்தினர் சொல்லும் க்ஷணிகவிஜ்ஞான மென்னும் ஜீவர்கள், இந்த அந்தக்கரண விகாரமாய், ஸவிஷயமாய் ஜடமாய், அநித்யமான ஜ்ஞானவளவிலேயே யுள்ளவர்கள். அத்வைத மதத்தினர் சொல்லும் நித்திய விஜ்ஞானமென்னும் ஜீவர்கள்

அஜடமாய், நிர்விஷயமாய் ஸாக்ஷிசைதன்னியமென்னும் பரபிரம்ம ஸ்வரூபர்கள். ஆகவே இவ்விரு மதத்திலும் ஜீவஸ்வரூபத்தில் அதிக மாறுதலிருக்கிறது. புத்தமத ஜீவர்கள் "சித்தம்" என்றழைக்கப்படுமவர். அத்வைத மத ஜீவர்கள் "ஆத்மா" என்றழைக்கப்படுமவர் இப்படியே பெருவாரியாக வியவஹாரமிருக்கிறது.

இவ்விதமான ஜீவர்கள் வேதம், ஸ்மிருதி முதலியதில் சொல்லும் வர்ணாசிரமோசித கர்மங்களை ஈசுவராராதனரூபமாய்ச்செய்து, அதன் பலங்களை விரும்பினால் ஈசுவரானுக்ரஹத்தால் அவைகளைப்பெற்று அநுபவித்து மேன்மேலும் ஸம்ஸாரிகளாய் விடுகிறார்கள். பலத்தை விரும்பாவிடில் இவ்வித கர்மத்தால் மனதின் அழுக்கைப் போக்கடித்து தத்வஜ்ஞானத்தில் ருசியுடையவர்களாகிறார்கள். பிறகு ஸதாசாரியோபாஸனை செய்து, 'தத் த்வம் அஸி' என்னும் வாக்கியத்தால் பிரம்மாத்ம உபதேசம் பெற்று அதை மனனம் செய்து பேதவாஸனையைப் போக்கி அத்வைத ஸாக்ஷாத்காரம் பெற்று பிரம்மைக்கிய பாவமாகிற முக்தி யடைகிறார்கள். ஜ்ஞானம் உண்டானதும் கருமம் தன்னடையே விடுபட்டுவிடும். பலம் கிடைத்ததும் உபாயம் தன்னடையே விடுமல்லவா. அதே நியாயமிங்கும். அத்வைத ஸாக்ஷாத்காரம் பெற்றதும் ஜீவன் முக்தனே. சக்கிரத்தைச் சுற்றி நிறுத்தினாலும் அது சில நேரம் சுற்றுவதுபோல் ஞானமுண்டாகியும் அனாதிபேதவாஸனை சிறிது அனுவர்த்திக்கும் இது பந்தஹேதுவாகாது. இந்த பிரம்மைக்கிய பாவமாகிற மோக்ஷமெங்குமுள்ளதாகையால் இதைப்பெற ஒரு தேச விசேஷம் போக வேண்டாம்.

இவ்விதமாக பிரம்மமொன்றே பரமார்த்த மான சால் அது தனக்கு ஸஜாதீயமான ஜீவபேதமும், தனக்கு விஜாதீயமான பிரபஞ்ச பேதமும், தன்னிடமுள்ளதாகக் கூடிய ஞானம் முதலிய குணங்களால் பேதமும் அற்றது என்று தேறிற்று. இவ்விதமாக பிரம்மதுக்குத் அவித்யா ஸம்பந்தமும், அதன் நிவிருத்தியும், வேதபிராமாணி யத்தைக் கொண்டு அங்கீகரிக்கவேணும். பிரமமும் அதா வது பொய்யறிவும் ஒரு உண்மையான ஆதாரத்திலேயே தோற்றுவதால் பிரபஞ்ச பிரமத்துக்கு ஆதாரமாக பரபிரம் மம் வேண்டியதாகிறது. ஆதாரமும் பொய்யானல் அதுக்கு மற்றொரு ஆதாரமும் வேணுமென்று அனவஸ்தை அதாவது முடிவில்லாமை ஏற்படுமென்று பிரம்மம் பரமார்த்தமாகிறது. ஆகவே புத்தமத ஸாரமான ஸர்வசூனியவாதம் அங்கீகரிக்க முடியாததாகிறது. இம்மதத்தில் "தத் த்வம் அஸி" என் னும் வாக்கியத்துக்கு காரணத்வம், காரியத்வம், ஆகிற விசேஷணத்தை விட்டு பிரம்மைக்கிய பாவம் மாத்திரமே தாத்பரியமாகிறது. ஆக இவ்வளவால் ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரியாரால் பிரஸித்தமான அத்வைத மதத்தின் ஸாரத்தை கொஞ்சம் நாம் அருந்தினேம். விருப்ப முடை யோர்கள் விரிவாக அத்வைத நூல்களில் அவ்விஷயங்களைக் காணவேணும்.

# விசிஷ்டாத்வைதம்.

இம்மதத்தைக் கண்டு உலகில் பிரஸித்தமாக்கினவர் ஸ்ரீ ராமாநுஜாசாரியார். இவர் தொண்டைமண்டலத்தில் ஸ்ரீ காஞ்சீ க்ஷேத்திரத்துக்கடுத்த ஸ்ரீ பெரும்பூதூரில் கி. பி. 12-வது நூற்றாண்டில் பிறந்து வளர்ந்து வேதாந்தத்துக்கு விசிஷ்டாத்வைதபரமாய் உரை செய்தார். இவர் ஆதிசேஷாம்சம் என்று பிரஸித்தமானவர். இவர் மதத்தின் ஸாரமாவது :—

(1) சித், (2) அசித், (3) ஈசுவரன் என்று மூன்று த்த்வங்கள் பரமாத்தமாய் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதில் சித் அதாவது சேதனன் போக்தா - அனுபவிப்பவன், என்றும், அசித் அதாவது அசேதனம் போக்கியம் - அனுபவிக்கப்படும் பொருள் என்றும், ஈசுவரன் பிரேரிதா அதாவது நியாமகன் என்றும் வேதபிரஸித்தம். சிதசித் தத்வங்கள் ஈசுவர தத்வத்துக்குச் சேஷம், சரீரம், ஈசுவரன் சேஷீ, சரீரீ - ஆத்மா என்னும் இம்மத ஸித்தாந்தத்தை நம்மாழ்வார் தாமருளிச் செய்த திருவாய்மொழியின் முதற் திருவாய்மொழியில் 'திடவிசும் பெரிவளி' என்னும் பாசுரத்தில் 'உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்" என்று ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கிறார். நம்மாழ்வார் பிரபந்நஜனகூடஸ்த்தர். இவர் பகவானுடைய பாதுகை என்று ஸம்பிரதாயம். இம்மதத்தில் இந்த சரீர சரீரி பாவமே முக்கியமான ஒரு விஷயம் இதுவே பகவானுக்கு உபாதான

காரணத்வத்தைச் சொல்லி விசிஷ்டாத்வைதம் என்று வியவஹரிப்பதற்குக் காரணமாகிறது.

அதில் (1) சேதனன் அணுவானவன், ஞானஸ்வரூபன், ஞானம் முதலிய குணத்தை யுடையவன். அணுவானதால் இவனுக்கு இஹபரலோக ஸஞ்சாரம் நேராகவே யுண்டு. ஞானமென்னும் இவன் குணமானது விபு அதாவது எங்கும் பரவினது. (2) அசேதனமும் விபுவானதே. இது எப்பொழுதும் பரிணமித்துக் கொண்டே யிருக்கும். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணமுடையது பிரகிருதி. அக்குணங்கள் ஸமமாயிருக்க பிரளயம். அக்குணங்கள் விஷமம் அதாவது ஏற்றத் தாழ்வாயிருக்க ஸ்ருஷ்டி ஸ்திதி. மஹத் அஹங்காரம் முதலிய 24 தத்வமாய் பரிணமித்து பிராகிருதமான பதினன்கு உலகமுள்ள பிரமாண்டமான இவ்விபூதியோடு சேதனனுக்கு தேஹாதிகள் மூலமாய் ஏற்பட்ட ஸம்பந்தம் அநாதியானது. இந்த சேர்த்தியால் ஜீவர்களுக்கு தங்கள் ஸ்வரூப ஸ்வபாவத்தைப் பற்றின ஞானம் அடியோடு சுருங்கி, 'தேஹமே ஆத்மா' என்கிற தேஹாத்ம பிரமமுண்டாகிறது. (3) ஈசுவரன் விபுவானவன். ஞானநந்த ஸ்வரூபன். ஞானம் சக்தி முதலிய எல்லையில்லாத பல கல்யாணகுணங்களுடையவன். இவன் ஸ்ரீமந்நாராயணன் விஷ்ணு வாஸுதேவன் பரபிரம்மம் என்றிது முதலான திருநாமத்தால் அழைக்கப் படுகிறான் என்பது வேதம் பாஞ்சராத்திரம் முதலிய பிரமாணத்தால் தேறுகிறது. பிரம்மா ருத்திரன் முதலானோரும் நம்மைப்போன்று ஸம்ஸாரிகளாய் ஈசுவர சேஷமான ஜீவர்களே. நம்மிலும் அதிகமான புண்ணிய விசேஷத்தால் மூவுலகு படைத்தல் மூவுலகு ஸம்ஹரித்தல் முதலிய அரிய

தொழில் செய்கிறார்கள் ஆனால் இவர்கள் மோக்ஷந் தரமாட்டாதவர்கள். விஷ்ணுவே மோக்ஷம் தரவல்லவன்.

ஜீவர்கள் தங்களுடைய அனாதி புண்ணிய பாபரூப கர்மங்களடியாக மாறிமாறிப் பல பிறப்பு பிறக்கிறார்கள். பிரளய காலத்தில் சேதனம் அசேதனம் என்னுமிவை நாமரூபங்களற்று ஸூக்ஷ்மமாய் ஸ்ருஷ்டி ஸ்திதி காலத்தில் நாமரூபங்களை அதாவது பெயர், உருவம், இவைகளைப் பெற்று ஸ்தூலமாயிருக்கின்றன. இவைகளின் இவ்விரு அவஸ்தைகளிலும் இவற்றுள் அந்தர்யாமியாய் தேஹத்தில் ஆத்மாவைப்போல் இருந்துகொண்டு ஈசுவரன் இவைகளை நியமிப்பதால், 'ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட பிரம்மம் காரணம், ஸ்தூல சிதசித் விசிஷ்ட பிரம்மம் காரியம், இரண்டும் (அத்வைதம்) ஒன்று' என்று இப்பொருளை யறிவிப்பதால் இம்மதம் விசிஷ்டாத்வைத மதமாகிறது. விசேஷணமான சேதனாசேதனங்களிலேயே தோஷம். விசேஷ்யத்தில் இல்லை. விசேஷண த்வாராவாகவும தன் நியமன சக்தியடியாக நேராகவும் விசேஷ்யமான ஈசுவரனுக்கு அவ்வக்காரியங்களில் சேர்த்தி என்பது தத்வத்ரயங்களின் ஸ்வரூப ஸ்வபாவங்களை யறிவிக்கிற வேதம் முதலிய பிரமாணஸித்தம்.

அனாதிகாலம் ஸம்ஸார சக்கிரத்தில் கீழ்மேலாகச் சுற்றி வருகிற ஜீவர்கள், தாங்கள் அறியாமலே செய்த புண்ணியமாக மாறின சில கர்ம விசேஷமே வியாஜமாகப் பெருகின ஈசுவரனின் நிர்ஹேதுக க்ருபையால் கெட்டவைகளில் விரக்தர்களாய் நல்லவைகளில் ருசி யுடையவர்களாகிறார்கள்.

பிறகு ஸதாசாரியாபிமானமுடைய ஸ்ரீ வைஷ்ணவ ஸஹவாஸம் பெற்று அதடியாக ஸதாசாரியனை உபாஸித்து தாபம் முதலிய பஞ்சஸம்ஸ்கார மூலமாய் திருமந்த்ரோபதேசம் பெறுகிறார்கள். பிறகு அதன் பொருளை எப்பொழுதும் அநுஸந்தித்துக்கொண்டும் அதுக்கு அங்கமாக தங்கள் வர்ணாசிரமோசித கர்மங்களையும், பாகவத தர்மங்களையும் தேஹ முடிவு வரையில் செய்துகொண்டும், பகவானிடம் பக்தி செய்கிறார்கள். இந்த பக்தியின் முதிர்ச்சியால் பகவானை விட்டு க்ஷணநேரமும் பிரிந்திருக்கமுடியாத அபிநிவேச விசேஷம் அதாவது ப்ரீதிவேக முண்டாய் அதனடியாக பகவதநுக்ரஹ முண்டாகி தேஹ முடிவில் பகவத் பிராப்தியாகிற முக்தி யடைகிறார்கள். அங்கு பகவத் குணங்களையும் பகவத் கைங்கரியங்களையும் நித்தியஸூரிகளுடன் ஒரு கோர்வையாக இருந்து செய்தனுபவித்து அத்தால் பரமானந்தமடைகிறார்கள். இவ்விதமான மோக்ஷப்ராப்தி தேசம் ஸ்ரீ வைகுண்டம். இது அப்ராக்ருதம். ஜ்யோதிர்மயம். சுத்த ஸத்வம். பகவத் இச்சையால் பலபடி மாற வல்லது இங்கு ஆதிசேஷனாகிற ஸிம்ஹாஸனத்தில் ஸ்ரீ பூமி நீளாதேவிகளுடன் அனந்த கருட விஷ்வக்ஸேனாதி ஸூரிகள் புகழ்ந்து அனுபவிக்கும்படி சதுர்புஜனாய் பரப்ரஹ்மமான ஸ்ரீமந் நாராயணன் வீற்றிருக்கிறான் என்பது சாஸ்திரஸித்தம்.

ஸ்ரீயஃபதித்வம், ஜகத்ஸ்ருஷ்டி முதலிய வியாபாரந் தவிர ஆனந்தானுபவம் அங்குள்ள எல்லாருக்கு மொக்கும். மோக்ஷத்தில் ஜீவர்களின் ஞான மென்னுங் குணம் எங்கு மொக்க வியாபித்திருக்கும். இத்தால் அணுவான ஜீவர்களும்

"விபுவானவர்கள்" என்றழைக்க உரியராகிறார்கள். ஆக இம்மதத்தில் "தத்த்வம் அஸி" என்னும் வாக்கியத்துக்கு காரியத்வ காரணத்வ விசிஷ்ட சேதனாசேதன விசிஷ்ட பிரமாத்வைத பாவம் தாத்பரியமாகிறது. பகவானே சேதனர்கள் செய்த பிரபத்தியால் உண்டான அதாவது பிரகாசித்த அனுக்ரஹ விசிஷ்டனாய் உபாய மென்றும் அவனே சேதனர்கள் செய்த கைங்கர்யத்தால் உண்டான அதாவது பிரகாசித்த பிரீதிவிசிஷ்டனாய் உபேயம் பிராப்யம் என்பது இம்மதத்தின் முக்கியமான ஒரு விஷயம். ஆக இவ்வளவால் ஸ்ரீ ராமாநுஜாசாரியரால் பிரஸித்தமான விசிஷ்டாத்வைத மதத்தின் ஸாரத்தை கொஞ்சம் நாம் அருந்தினோம். விருப்பமுடையோர்கள் விரிவாக விசிஷ்டாத்வைத நூல்களில் அவ்விஷயங்களை காணவேணும்.

---

# த்வைதம்.

இம்மதத்தை உலகில் ஸ்தாபித்தவர் ஸ்ரீ ஆனந்த தீர்த்தாசார்யார். இவர் கன்னடதேசத்தில் உடுப்பி என்னும் க்ஷேத்திரத்தில் கி. பி. 13-வது நூற்றாண்டில் பிறந்து வளர்ந்து வேதாந்தத்துக்கு த்வைதபரமாய் வியாக்யானம் செய்தார். இவர் "வாயு பகவானின் அம்சம்" என்றும் "மத்வாசாரியார்" என்றும் பிரஸித்தமானவர். இவர் மதத்தின் ஸாரமாவது:—

இம்மதத்தில் (1) ஸ்வதந்திரம், (2) அஸ்வதந்திரம், என்று இரண்டு தத்வங்கள் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவை பரமார்த்தமே. அதில் (1) ஸ்வதந்திர தத்வம் விஷ்ணு பரபிரம்மம் என்று இது முதலான திருநாமங்களால் அழைக்கப்படுகிறது. இந்த விஷ்ணு வானவன் எண்ணிறந்த பல குணங்களுடையவன். ஞானநந்த ஸ்வரூபன். அப்ராகிருதமான நித்திய திருமேனியுடையவன். இவன் விசேஷணமான திருமேனி, ஞானம் முதலிய எல்லாம் இவன் ஸ்வரூபமே. (2) அஸ்வதந்திரமானது (1) சேதனன். (2) அசேதனம் என்று இரண்டு விதம். (1) சேதனனான ஜீவன் அணு ஸ்வரூபன். ஞாநனந்த ஸ்வரூபன் ஞானம் முதலிய குணமுடையவன். அவ்யக்தம் என்றும், லக்ஷ்மி என்றும் சொல்லப்படும் ஜீவன் மாத்திரம் விபுவானவன். பிரம்மா ருத்திரன் முதலியோரும் ஜீவர்களே. இந்த சேதனனான ஜீவன் ஈசுவரனின் பிரதிபிம்பம். அதாவது கண்ணாடி

முதலியதில் முகத்தின் பிரதிபிம்பம்போல். இவ்விடத்தில் கண்ணுடி நிலையில், நித்தியமான ஜீவனின் சித் ஸ்வரூபம் இருக்கிறது. பிம்பத்திலுள்ள கண்வாய் முதலியவைகளுக் குள்ள ஸாமர்த்தியம் பிரதிபிம்பத்துக்கு இல்லாததால் அவை களுக்கு நிஜமான பேதம்போல் இங்கும் ஜீவேசுவரபேதம் நிஜமே. ஜீவனும் பலவாகையால் அவர்களுக்குள்ளும் பேதம் வாஸ்தவமே.

இவ்விதம் பலவான ஜீவர்கள் பலவகைப்பட்டவர்கள். (1) ஸ்த்ரீ ஜீவர்கள். (2) புருஷஜீவர்கள் என்றிருவகை. மற்றொரு வகை (1) நித்ய ஸம்ஸாரிகள். (2) தமோ யோக்கியர்கள். (3) முக்தியோக்கியர்கள் என்று. அதில் (1) புருஷ ஜீவர்கள் ஸம்ஸார தசையில் கர்மமடியாக ஸ்த்ரீ களானாலும் முக்தி தசையில் புருஷர்களே. (2) ஸ்த்ரீ ஜீவர் கள் இரண்டு தசையிலும் ஸ்த்ரீகளே. (1) நித்திய ஸம்ஸாரி கள் அனாதிகர்ம வாஸனை மூலமாகவும், தேஹமே ஆத்மா வென்னும் புத்தியாலும், வேதம முதலியதுகளில் சொன்ன கர்மங்களை அவ்வப் பலங்களில் ஆசையால் செய்கிறார்கள். ஆகவே அப்பயனை யனுபவிக்க அவர்கள் மாறிமாறிப் பல பிறப்படைபவர்கள். (2) தமோயோக்கிய ஜீவர்கள் காரணமில்லாமலேயே பகவானிடமும், அவன் பக்தர்களிட மும் விரோதமுடையவர்களாய் "தானே ஈசுவரன்" என்னும் மதியுடையவர்களாய், பாபமே செய்து நரகிலழுந்துமவர்கள் (3) முக்தி யோக்கிய ஜீவர்கள் பராபர தத்வந் தெரிந்து வேதம் முதலியதிற் சொன்ன கர்மங்களை பலத்தி லாசை யில்லாது பகவதாராதன ரூபமாய்ச் செய்து ஞான பக்தியாதிகளை

வளர்த்து மோக்ஷமடையும் ஸ்வபாவர்கள். உபாயத்தின் நிலைக்குத் தக்கபடி பலத்திலும் மாறுபாடு உண்டு என்னும் நியாயப்படி முக்தி யோக்கிய ஜீவர்களிலும் அவரவர்களின் உபாய தாரதம்யத்தின்படி பல தாரதம்மியம். அதாவது— மாறுபாடு உண்டு என்பது இம்மத ஸித்தாந்தம்.

(2) அஸ்வதந்திரமான அசேதனமும் பிரகிருதி மஹத் அஹங்காரம் முதலிய இருபத்துநான்கு தத்வமாயும், ஸ்ரீவைகுண்டலோகமாயு மிருக்கும். அதில் ஸ்ரீவைகுண்ட லோகம் அப்ராகிருதம் நித்யம் ஜ்யோதிர்மயம். ஸ்வதந்திர தத்வமான ஈசுவரன் அஸ்வதந்திர வஸ்துவான சேதனசேதனங் களை அந்தர்யாமியாய் உட்புகுந்து நியமிக்கிறான். ஆகையால் அவன் "ஆத்மா" என்றழைக்கப்படுகிறான். ஆனால் விசிஷ்டா த்வைத மதத்திற்போல் அபேதம் சொல்லுவதற்குக் காரண உபாதான காரணத்வம் ஈசுவரனுக்கு இம் மதத்தில் அங்கீகரிக் மான கப்படாததினால் இம் மதம் த்வைத மதமாகிறது. முக்தி யோக்கிய ஜீவர்களில் புண்ணிய க்ஷேத்திரம், புண்ணிய தீர்த் தம், இவைகளின் சமீபமும், வசிக்கும் பசு, பக்ஷி, விருக்ஷாதி யர்களும் முக்தியடைந்து அங்கும் பசு பக்ஷி விருக்ஷாதி களாயே யிருக்கின்றனர். இது நித்தியம் அப்ராகிருதம் ஜ்யோதிர்மயம். இவர்கள் கொஞ்சமான ஸ்வரூபாநந்தாநுபவ முடையவர்கள். இவர்களைவிட மநுஷ்யர்கள், மநுஷ்யர்களை விட மநுஷ்ய கந்தர்வர்கள் என்றிப்படியாக ஆநந்தவல்லியிற் சொன்னபடி இவர்கள் படிப்படியதிகமான ஸ்வரூபானந்தானு பவமுடையவர்கள் மோக்ஷதசையில். இதுபோலவே (1) ஸாலோக்கியம் (2) ஸாரூப்யம் (3) ஸாமீப்யம் (4) ஸாயுஜ்யம்

என்னும் நான்கு விதமான மோக்ஷத்தையும், அவரவர்கள் யோக்யதாநுகுணமாகப் பெறுகிறார்கள்.

இவ்விதமாக முக்தியோக்கிய ஜீவர்கள், அஸ்வதந்திர வஸ்துவை அவித்யா மாத்திரம், அதாவது மாயா மாத்திரம், அதாவது 'அ' என்னும் விஷ்ணுவின் வித்யையால் ஞானத்தால் பகவத் சம்பந்தத்தால் எண்ணி ரக்ஷிக்கப் படும் பொருள் என்றும், மேம்பொருளான ஈசுவரன் அத்வைதம் அதாவது—ஒத்தார் மிக்கா ரில்லாத தனி ஸ்வதந்திரன் என்றும் எண்ணி, சாஸ்திர விஹித கர்மங்களை பலத்தி லாசை யில்லாது பகவதாராதனமாகச் செய்கிறார்கள். அத்தால் மனதில் ராகம் முதலிய அழுக்குப் போக பகவத் குணங்களை மனனஞ் செய்து பகவானிடம் பக்தி செய்தே பகவத் பிரத்யக்ஷம் பெறுகிறார்கள். இக்காலத்திலிவர்கள் செய்யும் கர்மம் முக்தியில் ஆநந்த விசேஷத்துக்குக் காரணமாகும். பகவத் குணோபாஸனத்தில் ஆத்மாவெனும் பகவத்குணோபாஸகன் பகவத் பிரத்யக்ஷம் பெற்று இங்கேயே முக்தியடைகிறான். பகவானின் (1) ஸத் (2) சித் (3) ஆநந்தம் (4) ஆத்மா என்னும் நான்கு குணோபாஸகர்களும், பலகுணோபாஸகர்களும், தேஹாவஸானத்தில் ஸ்ரீ வைகுண்டஞ் சென்று தங்களுக்கான மோக்ஷ மடைகிறார்கள். முக்தியில் நித்திய ஸூரிகள் என்பது இம்மதத்தில் கிடையாது. எல்லோரும் இங்கிருந்து முக்தி பெற்றவர்களே. ஈசுவரனும், அவ்யக்தமெனும் லக்ஷ்மியுமே நித்யர்கள். அதாவது—நித்யமான திருமேனியுடையவர்கள். மோக்ஷந் தருபவன் விஷ்ணு ஒருவனே. இவனொருவனே முக்தர்களுக்கதிபதி.

ஆனால் பிரம்மமொன்று தெரிய மற்றதெல்லாந் தெரியும், பிரம்மமறிந்தவன் பிரம்மமாயே ஆய்விடுகிறான் என்பதுவும், ஒரு ஊரில் ஒரு பிரதான புருஷன் தெரிய அவ்வூர் முழுவதும் தெரியுமென்பதுபோல் பிரம்ம பிராதானியத்தைப் பற்றவும், பிராம்மண பூஜகனை மற்றவன் பிராம்மணனாகிறான் என்றால் பிராம்மணனைப் போல் கௌரவிக்கப்படுகிறான் என்பதுபோல் பிரம்மதுல்ய தையைப்பற்றவும், ஒந்ததே தவிர வேறில்லை. அடிமைக்கு எஜமானனின் அநுக்ரஹத்தால் லாபமேதவிர தானே எஜமானனெனும் புத்தியால் நாசமே. அதுபோல் பிரம்மாத்வைத பாவம் மனிதனுக்குத் தகாது என்றிம்மதாபிப்ராயம். ஆகவே இம்மதத்தில் "தத் த்வம் அஸி" என்னும் வாக்கியத்திற்கு "நீ அதுபோல் இருக்கிறாய்" என்றும், அல்லது கீழ் வாக்கியமான ஸ ஆத்மா என்பதைக் கூட்டி இரு வாக்கியத்தின் இணைப்பால் நடுவில் குறைந்து தொக்கி நிற்கும் அ என்னும் எழுத்தை வைத்துக்கொண்டு பரபிரம்மமே ஸ்வதந்திரமாகையால் ஆத்மா, நீ அந்த பிரம்ம மாகமாட்டாய் அஸ்வதந்திரனாகையால் என்று தாத்பர்யமாகிறது.

ஆக, இவ்வளவால் ஸ்ரீ ஆனந்ததீர்த்தாசாரியரால் பிரசித்தமான த்வைத மதத்தின் ஸாரத்தை கொஞ்சம் நாம் அருந்தினோம். விருப்பமுடையோர்கள் விரிவாக த்வைத நூல்களில் அவ் விஷயங்களைக் காணவேணும்.

---

குறிப்பு :—

இந்த மத த்ரயத்திலும், தத்வம், ஹிதம், புருஷார்த்தம் இவைகளைப் பற்றின அபிப்ராய ஒற்றுமை வேற்றுமைகளைக் காட்டுகிறது.

## I. தத்வம்:—

### 1. பிரம்மம்.

| | |
|---|---|
| **அத்வைதம்.** | இது நிர்குணம். விபு. |
| **விசிஷ்டாத்வைதம்.** | இது ஸகுணம். விபு. ஞானம் முதலிய குணங்கள் தர்மம். |
| **த்வைதம்.** | இது ஸகுணம். விபு. ஞானம் முதலிய குணங்கள் தர்மிஸ்வரூபம். |

### 2. ஜீவன்.

| | |
|---|---|
| **அத்வைதம்.** | இது பிரம்மத்தின் தோற்றம், அணு, ஞாதா என்பது அந்தக்கரண ஸம்பந்தத்தால். உண்மையில் பிரம்மமே. |
| **விசிஷ்டாத்வைதம்.** | இது பரமார்த்தம். ஸகுணம். அணு தர்மமான ஞானம் விபு. அத்தால் முக்தியில் ஜீவன் விபு. என்றழைக்க உரியனாகிறான். |
| **த்வைதம்.** | இது பரமார்த்தம். ஸகுணம். அணு அவ்யக்தமென்னும் லக்ஷ்மி விபு. ஜீவன் தாரதம்மியமுள்ளவன் அநுபவத்தால். |

### 3. அசேதனம்.

| | |
|---|---|
| அத்வைதம். | இது பிரம்மத்தின் தோற்றமே. 24 தத்வ மாயுள்ளது. |
| விசிஷ்டாத்வைதம். | இது பரமார்த்தம். 24 தத்வம். பிராகிருதம். அபிராகிருதம் ஸ்ரீவைகுண்டம் (விபு). |
| த்வைதம். | இது பரமார்த்தம் 24 தத்வம். பிராகிருதம் அபிராகிருதம் ஸ்ரீவைகுண்டம். (விபு). |

## II. ஹிதம்:—

### 1. கர்மம்.

| | |
|---|---|
| அத்வைதம். | இது மனதினழுக்கு கழியவும், தத்வ ஞானத்தில் ருசி யுண்டாகவும், செய்வது. ஞானமுண்டானதும் செய்ய வேண்டாதது. ஞான முண்டாவது நாளாகுமாகையால் சரீர முடிவு ஸமீப காலம் வரையில் செய்ய வேண்டியதே. |
| விசிஷ்டாத்வைதம். | இது ஞானம், பக்தி இவைகளுக்கு அங்கமானது. ஆகவே பக்தி வளர்ச்சிக்காக சரீர முடிவு வரையில் இது செய்ய வேண்டியதே. |

த்வைதம். இது ஞான முண்டாவதற்கு முன் அதுக்கு காரணமாயும், ஞான முண்டானதும், மோக்ஷத்தில் பல விசேஷத்துக்கு காரணமாயும் இருப்பதால் இது சரீர முடிவு வரையில் செய்ய வேண்டியதே.

## 2. ஞானம்.

அத்வைதம். அபேத வாக்கியார்த்த ஞானம்.

விசிஷ்டாத்வைதம். ஜீவ பரமாத்ம யாதாத்மிய ஞான வளர்ச்சி அத்தால் ஜீவ் பிரத்யக்ஷ முண்டாய் பரமாத்ம பக்தி.

த்வைதம். ஜீவபர யாதாத்மிய ஞானம் பலவான பகவத் குணோபாஸனம்.

## 3. பக்தி.

அத்வைதம். இது வாக்கியார்த்த ஞானத்துக்கு உபயோக மானது.

விசிஷ்டாத்வைதம். இது பரபக்தி, பரஞான, பரம பக்தி பாகவதாபிமான ரூபமாய் பலபடி யுள்ளது.

த்வைதம். இது பகவத் குணோபாஸன முதிர்ச்சி யானது மோக்ஷோபாயம்.

## VII. புருஷார்த்தம் (மோக்ஷம்.) :—

| | |
|---|---|
| **அத்வைதம்.** | இது பிரம்மைக்கிய பாவம். |
| **விசிஷ்டாத்வைதம்.** | இது ஸ்ரீவைகுண்டத்தில் பகவத் பிராப்தி. நித்ய முக்தர்களுடன் சேர்ந்து, பகவத் குணாநுபவம், பகவத் கைங்கரியஞ் செய்து, அத்தால் பிரகாசமான பகவதானந்தத்தைக் கண்டு ஆனந்தித்தல். |
| **த்வைதம்.** | ஸ்ரீவைகுண்டத்தில் அப்ராகிருத உருவத்துடன் இங்குள்ள உருவம் போன்று இருந்து தனக்கனுகுணமான ஸ்வாத்மாநந்தானுபவமனுபவித்தல். |

---

## முடிவுரை.

அன்பர்களே! இப்பொழுது நான் உங்களுக்கு மும்மதத் தேனடை என்னும் இச்சிறு நூலை ஸமர்ப்பித்திருக்கின்றேன். இந்நூலிலுள்ள விஷயங்களை யறிவிப்பதான வேதமானது ஒரு பதத்துக்கே பல பொருள் கொள்ளலாம்படி கம்பீரமான ஒரு நூலாகும். பாரத மக்களான நமக்கு அதுவே மூலப்பிர மாணமாக இருந்து வருகிறது. நம் சொத்துபோன்று அருமையான ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம், முதலான 64 கலைகளுக்கும் அதுவே ஆணிவேராக இருந்து வருகிறது. பரபிரம்மத்தை யறிவிப்பதான அதின் அந்த மான உபனிஷத் பாகமானது மிகவும் கம்பீரமானது ரஹஸ்ய மானதுங்கூட. அதன் பொருளை நம் ஆசாரியர்கள் நம்மிட முள்ள மேலான அருளினால் தங்கள் நூல்களில் நன்றாக காண்பித்திருக்கிறார்கள். பலவித அபிப்ராயமானது, பல வாகச் சொல்ல வுரியதான பிரம்மத்தின் அளவிலா மஹிமையை அறிவிப்பதே தவிர, நமது ஸந்தேஹத்துக்கு அது சிறிதும் காரணமாகாது. வேதாந்தத்தின் விவரண மான ஸ்ரீ பகவத் கீதையின் பொருளைச் சுருக்கமாக அறிந்து கொள்ளும்படி இதுபோல் என்றால் ஸ்ரீ கீதா சுலோக ஸங்கிரஹம் தாத்பரியத்துடன் எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீ கீதையின் செம்மைப் பொருள் விளக்கம், ஸ்ரீ கீதை

2-வது அத்தியாயம் தமிழ் வசனம், என்று இது முதலான சிறுசிறு நூலும் என்னால் எழுதப்பட்டிருக்கிறது. வேதாந்த மதங்களும் இவைபோல் இன்னும் பலவுள்ளன. அவைகளை யெல்லாம் அறிந்து கொள்ளுவதற்கு முன் சிறு கருவியாக இந்நூல் உபயோகப்படும்படி இது உங்கள் முன் என்னால் வணக்கமாக ஸமர்ப்பிக்கப்பட்டது. மீதி நூல்களையும் உங்களுக்கு ஸமர்ப்பிக்க வேண்டி உங்களுடைய அன்பு மிக்க ஆசீர்வாதத்துடன் ஈசுவரானுக்ரஹத்தையும் வேண்டி நிற்கும்.

P. B. K. ஸ்ரீநிவாஸாசாரியார்,

நெ. 12, துளசிங்கப்பெருமாள் கோவில் சந்து,

11—4—1948. திருவல்லிக்கேணி மதராஸ்.

---

Srimath Kanchimuni Press—1,000 copies—3–4–1948.